இல்லை. ஆனால், கொளத்தூர் நகரம் மாநகராட்சியின் ஒரு பகுதியாக இருப்பதனால், அங்கு நிலம் கிடைப்பதிலே சிக்கல் இருக்கிறது என்ற நிலையில்தான் அங்கு அமைக்க முடியவில்லை. வண்ண மீன் பூங்கா என்பது, ஒட்டுமொத்தமாக, integrated ஆக இருக்க வேண்டும், அதாவது, அலுவலகம், ஆய்வகம், சுழல் நீர்த் தொட்டி, மீன் குஞ்சு இன உற்பத்தி, உயிர் வகை உற்பத்திக் கூடம், இனப்பெருக்கக் கூடம் ஆகியவை ஒருங்கிணையும்போது, அங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற வண்ண மீன்கள் ஒரு buy–back arrangement ஆக மேலைநாடுகளில் உள்ளதுபோல், நேரடியாக அங்கேயே வந்து உடனடியாகக் கொள்முதல் செய்கின்ற வாய்ப்பு நிச்சயமாக உருவாகின்ற ஒரு நிலை ஏற்படும். அப்பகுதி மக்களுடைய நலன் கருதித்தான் வண்ண மீன் பூங்கா மாதவரத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதில் மாறுபட்ட கருத்து எதுவும் கிடையாது. கொளத்தூரில் நிலம் இருந்தால், மீன்குஞ்சு பொறிப்பகம் மற்றும் மீன் தீவனம் உற்பத்தி அந்த இடத்திலேயே ஆரம்பிக்க முடியுமா என்பது குறித்த சாத்தியக்கூறுகளை அரசு ஆராயும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

நேரடி நெல் கொள்முதல் நிலையம்

***6862—திரு. சி. ராஜா:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, தேவூர் பேரூராட்சி, தேவூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர்*

அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதிக்குட்பட்ட தேவூர் பேரூராட்சியில் கடைசியாகத் திறக்கப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையம் மூன்று மாதங்கள் செயல்பட்டுள்ளது. அதில் 44 மெட்ரிக் டன் சன்ன இரக நெல்லும், 25 மெட்ரிக் டன் பொது இரக நெல்லும், ஆகமொத்தம், 69 மெட்ரிக் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதன்பின், நெல் வரத்து இல்லாத காரணத்தால், நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை. தற்போது தேவை ஏற்படின், நெல் கொள்முதல் நிலையம் திறப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. சி. ராஜா, இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

36—

ஆரம்ப சுகாதார நிலையம்

***8576—திரு. ஆர். தங்கதுரை:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, வத்தலக்குண்டு ஒன்றியம், தெப்பத்துப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,